Australian Government

BE COVIDSAFE

# கோவிட்-19 (COVID-19) : அறிகுறிகளை இனங் கண்டு கொள்தல்

| அறிகுறிகள் | கோவிட்-19<br>அறிகுறிகள் மிதமான முதல் தீவிரமான வரையிலான எல்லையுடையது | தடுமன்<br>படிப்படியாக அறிகுறிகளின் தென்பாடு | ஃப்ளூ(அழற்சிக் காய்ச்சல்)<br>திடீரென எதிர்பாராமல் அறிகுறிகளின் தென்பாடு | ஒவ்வாமைகள்*<br>அறிகுறிகளின் தென்பாடு திடீரென எதிர்பாராமலோ, படிப்படியாகவோ ஏற்படலாம் |
|---|---|---|---|---|
| காய்ச்சல் | பொதுவாக தென்படும் | அரிதாக தென்படும் | பொதுவாக தென்படும் | இருக்காது |
| இருமல் | பொதுவாக தென்படும் | பொதுவாக தென்படும் | பொதுவாக தென்படும் | பொதுவாக தென்படும் (மூச்சிழுப்பு) |
| தொண்டை வலி | சில சமயங்களில் தென்படும் | பொதுவாக தென்படும் | சில சமயங்களில் தென்படும் | சில சமயங்களில் தென்படும் (தொண்டையிலும் மேலன்னத்திலும் அரிப்பு) |
| மூச்சிரைப்பு | சில சமயங்களில் தென்படும் | இருக்காது | இருக்காது | பொதுவாக தென்படும் (மூச்சிழுப்பு) |
| சோர்வு | சில சமயங்களில் தென்படும் | சில சமயங்களில் தென்படும் | பொதுவாக தென்படும் | சில சமயங்களில் தென்படும் |
| வலிகளும் வேதனைகளும் | சில சமயங்களில் தென்படும் | இருக்காது | பொதுவாக தென்படும் | இருக்காது |
| தலைவலிகள் | சில சமயங்களில் தென்படும் | பொதுவாக தென்படும் | பொதுவாக தென்படும் | சில சமயங்களில் தென்படும் |
| மூக்கொழுகல் அல்லது மூக்கடைப்பு | சில சமயங்களில் தென்படும் | பொதுவாக தென்படும் | சில சமயங்களில் தென்படும் | பொதுவாக தென்படும் |
| வயிற்றுப்போக்கு | அரிதாக தென்படும் | இருக்காது | சில சமயங்களில் தென்படும், குறிப்பாக பிள்ளைகளுக்கு தென்படும் | இருக்காது |
| தும்மல் | இருக்காது | பொதுவாக தென்படும் | இருக்காது | பொதுவாக தென்படும் |

*WHO (உலக சுகாதார அமைப்பு), US Centers for Disease Control and Prevention (அமெரிக்காவினது நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்), மற்றும் American Academy of Allergy, Asthma and Immunology (ஒவ்வாமை மூச்சிழுப்பு மற்றும் நோயெதிர்ப்பியலுக்கான அமெரிக்க கல்விக்கழகம்) நிறுவனங்களால் வெளியிடப்பட்ட மூலப்பொருளிலிருந்து தகவமைக்கப்பட்டது. *சுவாச ஒவ்வாமைகளாவன: ஒவ்வாமை நாசியழற்சி (சளிக்காய்ச்சல்) மற்றும் ஒவ்வாமை மூச்சிழுப்பு ஆகியவற்றை உள்ளடக்கும். சளிக்காய்ச்சலின் இதர அறிகுறிகள் மூக்கரிப்பு மற்றும் அரிப்புடன் கூடிய கலங்கிய கண்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். கோவிட்-19, அழற்சிக் காய்ச்சல் மற்றும் ஒரு தடுமனுக்கு இடையேயான அறிகுறிகளை வேறுபடுத்துவது மிகவும் கடினமானதாகும். நீங்கள் ஏதேனும் கிருமித்தாக்கமோ சுவாச அறிகுறிகளோ கொண்டிருப்பின் (ஒரு தொண்டை வலி, தலைவலி, காய்ச்சல், மூச்சிரைப்பு, தசை வலிகள், இருமல் அல்லது மூக்கொழுகல் போன்றதான), பணிக்குச் செல்லாதீர்கள். நீங்கள் அவசியம் சுயமாக தனிமைப்படுத்திக் கொள்வதோடு, ஒரு மருத்துவ தொழில் வல்லுநரால் மதிப்பீடும் செய்யப்பட வேண்டும். நீங்கள் கோவிட்-19க்கான சோதனை செய்து கொள்வது தேவைப்படலாம். ஒரு மருத்துவ தொழில் வல்லுநரால் அனுமதிக்கப்படும் வரை நீங்கள் கண்டிப்பாக பணிக்குத் திரும்பிச் செல்லக் கூடாது. நீங்கள் அக்கறை கொண்டிருக்கும் மக்கள் காப்பாற்றப் படுவதையும், பாதுகாக்கப் படுவதையும் நீங்கள் உறுதி செய்தாக வேண்டும். ஒவ்வாமை நாசியழற்சி (சளிக் காய்ச்சல்) மற்றும் ஒவ்வாமை மூச்சிழுப்பு போன்றதான சுவாச ஒவ்வாமை அறிகுறிகளைக் கொண்டிருக்கும் நபர்கள், அவ்வாறான அறிகுறிகள் தென்பட்டவுடனும், எதிர்பாராத வேறறிகுறிகள் தென்பட்டாலோ, வித்தியாசமாக இருந்தாலோ, பொதுவாக உள்ளதை விட மோசமாக இருந்தாலோ, வழமையாக பாவிக்கும் மருந்துகளுக்கு பலனளிக்காது இருந்தாலோ, கண்டிப்பாக வீட்டிலேயே இருந்து கொள்ள வேண்டும் என்பதோடு கோவிட்-19க்கான சோதனையையும் செய்து கொள்ள வேண்டும்.*

**கொரோனா வைரஸ் (கோவிட்-19)** பற்றிய மேலதிக தகவல் பெற **health.gov.au** எனும் இணையத்தளத்துக்கு செல்க
www.**health.gov.au/resources/translated** எனும் இணையத்தளத்திற்கு செல்க அல்லது TIS சேவையை **131 450** எனும் எண்ணில் தொடர்புகொள்க.

DTDT0001045